# ஸ்டாலின் ஜெகதீசன் உடல் நிலை

## அபாயகரமாக விருக்கிறது.

(ஒரு நிருபர்)

சென்னை, ஜூலை. 7-

தோழர் ஸ்டாலின் ஜெகதீசன் நிலை மிக மோசமாக விருக்கிறது. அவரைப் பார்க்கத்திரளாக ஜனங்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்.

மார்வலி அதிகமாக விருக்கிறது. அவர் அவஸ்தைப் படுவதைப் பார்க்க முடியவில்லை. அவருடன் யாரும் பேசக்கூடாதென்று கண்டிப்பான உத்திரவு போடப்பட்டிருக்கிறது. தோழர் ஸ்டாலின் யாரையும் பார்த்து பேசாமலிருக்க அவாது கண்களை கட்டிவிடப் பட்டிருக்கிறது.

தோழர் ஸ்டாலினை மாலை 5-30 மணியிலிருந்து 7மணிவரை பார்த்து விட்டுப் போக அனுமதிக்கப் படுகிறது.

தோழர் ஸ்டாலின் நிலைமிகக் கவலைக்கிடமாகவிருக்கிறது.

இவர் இவ்வளவு மெலிந்த நிலையிலிருந்தும் இவாது உயிர் பிரியாம லிருப்பதற்கு இவாது மனோ வலிமையே காரணம். கலங்காத மனஉறுதிக்கு இவரே திருஷ்டாந்தமென ஒரு டாக்டர் அபிப்பிராயப் பட்டார்.